**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.32/2023**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெகதீஷ் | மதம் | : இந்து |
| த/பெ | : ராமசந்திர நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : ராஜபத்மாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் அம்மா, நான், என் சகோதரிகள் சேர்ந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். பிராதுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் வீடு, வீட்டுடன் சேர்ந்த காலி மனையை A அட்டவணையாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். A அட்டவணையின் ஒரு பகுதியை பி அட்டவணையாக காட்டியுள்ளேன் என்றால் அது வேறு புல எண்ணாகும். நான் பிராது மாதிரி வரைபடத்தில் வீடு, காலி மனை எந்த எந்த புல எண் என குறிப்பாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நில அளவையர் தாக்கல் செய்த வரைபடத்தில் ஆரஞ்சு வண்ணத்தில் உள்ளது காலி மனை என்றாலும் பச்சை நிறத்தில் உள்ளது கட்டிடம் கட்டப்பட்டுள்ள பகுதி என்றாலும் பாதி அவர் இடத்தில் கட்டியுள்ளார். புல எண்.13 எங்கள் இடமாகும். புல எண்.13ல் நீல வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது தெரியவில்லை.

2. நீதிமன்ற ஆணையர் நீ.ம.சா.ஆ 4 வரைபடத்தில் புல எண்.13ஐ காட்டியுள்ளார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியவில்லை. நான் தாக்கல் செய்த மனுவில் 221/13ஐ அளவீடு செய்ய கோரியிருந்தேன் என்றால் ஆமாம். அ.வ.எண்.114/1967ல் உள்ள தீர்ப்பின் அடிப்படையில் அளக்க நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் பேரில் நீதிமன்ற ஆணையர் அளந்தார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. அ.வ.எண்.114/1967ல் உள்ள இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் உள்ளது என்றாலும் நான் அதை மறைக்க வேண்டி

பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1972ல் நிறைவேறுதல் மனுவை பிரதிவாதியின் தந்தை சின்ன கோவிந்தசாமி நாயுடு தாக்கல் செய்து அது தள்ளுபடியாகிவிட்டது. அது எந்த அசல் வழைக்கை வைத்து தாக்கல் செய்யப்பட்டது என்பது தெரியுமா என்றால் அ.வ.எண்.114/1967ன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது.

3. அ.வ.எண்.114/1967 சமரச உடன்படிக்கையின் பேரில்தான் தீர்ப்பானது என்றால் இல்லை. அ.வ.எண்.114/1967 வழக்கு என்ன ஆனது என்றால் தெரியாது. அ.வ.எண்.114/1967வழக்கானது நீ.ம.சா.ஆ 4ல் உள்ள ஆரஞ்சு, பச்சை, நீலம், மஞ்சள் வண்ண பகுதியை பொறுத்து தாக்கல் செய்யப்பட்டு சமாதானமாக முடிக்கப்பட்டு அதன் பேரில் பிரதிவாதியின் தந்தைக்கு ஆரஞ்சு, பச்சை, நீலம், மஞ்சள் பகுதிகள் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டி பொய்யான பட்டாவின் அடிப்படையில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பட்டாவின் அடிப்படையில் வீடு மட்டும்தான் எனக்கு பாத்தியம் என்றாலும் பி அட்டவணை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் பொய். பிரதிவாதி நாராயணன் 2018ல் எனக்கு என் அம்மா, அப்பாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் என்னுடையது இல்லை.

4. 26.05.2018 நான் எனது வழக்கறிஞர் நடராஜனை வைத்து 16.05.2018ம் தேதியிட்ட அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்தும் வக்கலாத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்றுதான் என்றால் அது என் அக்காவின் கையெழுத்தை போல உள்ளது. நான் 16.05.2018ம் தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டு 26.05.2018ம் தேதியிட்ட வழக்கறிவிப்பை அனுப்பிவிட்டு தற்போது அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.114/1967 வழக்கு விவரங்கள் தெரிந்து அதில் உள்ள உண்மை விவரங்கள் மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதி வீடு கட்டும்போது அதை இடிக்க முயற்சித்ததாக புகார் அளித்தார்

என்றால் பொய். நான் சுத்தம் செய்ய சென்ற போது அவர் இடத்தில் இறங்கி வந்துவிட்டதாகதான் புகார் அளித்தார். நான் வீட்டை இடிக்க வந்ததாகதான் என் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் நான் வீட்டை இடிக்க போகவில்லை. சுத்தம் செய்யதான் போனேன். 16.08.2018ல் எங்களுக்கு என் அம்மாவிற்கு மீண்டும் பிரதிவாதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஞாபகமில்லை. அதற்கு என் அம்மா பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் அதை தனது சாட்சியத்தில் இந்நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு பதில் அறிவிப்பு விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கு சொத்து எனக்கு சொந்தமில்லை என்ற விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.114/1967ன்படி பி அட்டவணை சொத்து பிரதிவாதிக்குதான் சொந்தம் என ஏற்கனவே தீர்ப்பாகியுள்ளது என்றால் தவறு.

6. என் தந்தை, தாய் அ.வ.எண்.114/1967ல் ஆஜராகி அதில் தீர்ப்பாகியுள்ளது என்றாலும் பி அட்டவணை சொத்து பிரதிவாதிக்குதான் சொந்தம் என ஏற்கனவே தீர்ப்பாகியுள்ளது என்றாலும் சரியல்ல. என் வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. வட்டாட்சியருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதை மறைத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் தவறாக பெறவில்லை. உண்மை விவரங்களை மறைத்து நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)